# 12 மகோற்சவம்

ஆலயங்களில் பத்து அல்லது பன்னிரண்டு நாட்கள் மிகச்சிறப்பாக பூசைகள் நடாத்தி அங்குள்ள மூர்த்திகளின் திருவுருவங்களைப் பலவித வாகனங்களின் மேல் எழுந்தருளச் செய்து நடத்துவிக்கும் விழாவிற்கு திருவிழா என்று பெயர். இதனை மகோற்சவம் என்றும் குறிப்பிடுவர். அந்த வகையில் உற்சவம் என்ற சொல்லுக்குப் பல கருத்துக்கள் உள்ளன. அவற்றைப் பின்வருமாறு காட்டலாம்.

**1. மகோற்சவம்**

| மகா | உத் | சவம் |
|---|---|---|
| ↓ | ↓ | ↓ |
| பெரிய | உயர்வான | ஐந்தொழில் |

இதன்படி, உத்சவம் என்பது உயர்வான படைத்தல் முதலிய ஐந்தொழிலைக் குறிக்கும் என்பதாகும்.

**2. உத்சவம்**

| உத் | சவம் |
|---|---|
| ↓ | ↓ |
| ஞானம் | போக மோட்சம் |

இதன்படி, உற்சவம் என்பது மேலான ஞானத்தையும் போக மோட்சத்தையும் கொடுப்பது என்பதாகும். சிவபெருமான் ஐந்தொழில்களையுஞ் செய்து உயிர்களைக் காக்கும் முறையை மகோற்சவங்கள் உணர்த்துகின்றன என்பது மற்றொரு கருத்தாகும். அதனை கீழ்வருமாறு காட்டலாம்

| மகோற்சவ நிகழ்வுகள் | | பஞ்ச கிருத்தியங்கள் |
|---|---|---|
| 1. | கொடியேற்றம் | படைத்தல் |
| 2. | வாகனத் திருவிழாக்கள் | காத்தல் |
| 3. | தேர்த்திருவிழா | அழித்தல் |
| 4. | மௌனோற்சவம் | மறைத்தல் |
| 5. | தீர்த்தம் | அருளல் |

மகோற்சவத்தின் போது முதல்நாள் கிரியையிலே ஊரிற்கு நன்மையுண்டாகுதற்காக வைரவ மூர்த்திக்கு, கோயிலில் மேற்கு வீதியிலே பூசை செய்வது கிராம சாந்தி எனப்படும். அத்துடன் வீதியைச் சுத்தி செய்வதற்காக வாஸ்து சாந்தி செய்யப்படும். பின்னர் தர்ப்பை, வைக்கோல் முதலியவற்றால் செய்யப்பட்ட வடிவத்திற் சிவாக்கினியைச் சேர்த்து அது வீதியிலிழுக்கப்படும்.

மகோற்சவ ஆரம்பத்தின் போது வழக்கமான முதற் கிரியைகளான மண்ணெடுத்தல், முளையிடுதல், காப்புக்கட்டுதல் என்பனவும் இடம்பெறும். ஆசாரியர் திருவிழாவை நடத்தி முடித்ததற்காகக் காப்புக் கட்டுவார்.

இனி, மகோற்சவத்தின் போது இடம்பெறும் இன்றியமையாத விடயங்களையும், அவைகுறித்து நிற்கும் தத்துவங்களையும் அறிந்து கொள்வோம்.

### கொடிமரம்

ஆலயங்கள் தோறும் இடம்பெறும் மகோற்சவமானது கொடியேற்றத் துடனேயே இடம்பெறும். கொடியேற்றத்தில் கொடிமரம், திரைச்சீலை, கயிறு என்பன முக்கிய இடம்பெறுகின்றன. இவை எமக்குப் புலப்படுத்தும் தத்துவங்களாவன.

| | | |
|---|---|---|
| கொடிமரம் | - | சிவபெருமானையும் |
| திரைச்சீலை | - | ஆன்மாவையும் |
| கயிறு | - | பாசத்தையும் குறிக்கின்றன. |

படைத்தலுக்கு முன் ஆன்மாவும் பாசமும் ஒடுங்கியிருக்க, சிவம் மாத்திரந் தோன்றும். இந்நிலையைக் கொடியேற்ற முன் உள்ள தனிக்கொடிமரம் விளக்கும். படைப்புத் தொழிலான பின்பு ஆன்மாக்களும் பாசமும் தோன்றி நின்று சிவத்தையே ஆதாரமாகக் கொள்ளும். இது கொடியேற்றத்தின் பின், கொடி சீலையும் கயிறும் கொடிமரத்திலே தங்கி இருத்தலைக் குறிக்கும். கொடிச்சீலையில் ஆன்மாவைக் குறிப்பதற்காக இடபமும் ஆன்மாவிற்கு அருள் செய்தற்காக அஸ்திர தேவரும் கும்பம் முதலிய மங்கலப் பொருட்களும் இடம்பெற்றிருக்கும்.

### கொடியேற்றம்



திருவிழாவின் முதல்நாளில் கொடியேற்றம் இடம்பெறும். திருவிழாவிற்கு வரும் அடியார்களை உயர்பதம் அடையச் செய்வதற்காக இறைவன் இவ்விழா நாட்களில் சிறப்பாக எழுந்தருளி அருள் செய்யப் போகின்றான் என்பதனை நோக்காகக் கொண்டே இக் கொடியேற்றம் இடம்பெருகின்றது. மற்றுமொரு கருத்தின்படி சமம், விசாரம், சந்தோஷம், சாதுசங்கமாகிய நான்கு குணங்களையும் கால்களாக உடையது நந்தி. அது வெள்ளை நிறம் பொருந்திய பரிசுத்த தர்ம தேவதை ஆகும். அதனை ஒத்த ஆன்மாக்கள் தூய்மை உடையவர்களாகி, அந்நான்கு குணங்களையும் உடையவர்களானால் அவர்களை இறைவன் அவர்களிருக்கும் நிலையிலிருந்து மிக உயர்த்தி விடுவான் என்பதையும் இக்கொடியேற்றம் குறிக்கின்றது.


கொடிச்சீலையைக் கொடிமரக் கயிற்றிலே கட்டிக் கும்பத்தீர்த்தம் தெளித்து கொடிப் படத்தில் இடபதேவரைப் பூசித்துப் பின் சகல தேவர்களையும் அழைத்து மங்கல வாத்தியத்தாலும் தோத்திரத்தாலும் உபசாரஞ் செய்த பின் வநாயகருக்குத் தேங்காயுடைத்து கொடியேற்றப்படும்.

## கொடிமரப்பூசை



கொடி கட்டிய இடத்திலே சிவபெருமானுக்குப் பூசையும், கொடி மரத்தின் அடியில் லோகபாலருக்கும் வேறு தேவர்களுக்கும் பூசையும் செய்யப்படும். பின்னர் அஸ்திரதேவரில் தெய்வ ஆவாகனம் ஆனபின் ஐந்தொழிலையும் செய்து உலகங்களைக் கடவுள் காப்பாராக என ஆசீர்வாதம் செய்யப்படும்.

## சுவாமி வெளிவீதி வலம் வருதல்



பலிபீடத்திற்குப் பிரதிஷ்டை இரட்சாபந்தனம் பூசை முடிந்தபின் சுவாமி வெளி வீதிவரும். அப்போது வாயில் முன்னிலையிற் பிரம்மாவையும் வீதியின் எட்டுத் திக்குகளிலும் லோகபாலரையும் அழைத்து அவர்களுக்கு சங்கீதம் முதலிய உபசாரங்கள் செய்யப்படும். அன்றிரவு யாகம் தொடங்கி அக்கினி காரியம் வரை முடித்து ஒவ்வொரு நாளும் பகலிலும் இரவிலும் பூசை செய்யப்படும். ஒவ்வொரு நாளும் அஸ்திர தேவரை எழுந்தருளச் செய்து எட்டுத் திக்கிலும் பலியிடுதல் நடைபெறும். உலகம் எங்கிலும் திரோதான சக்தியின் முயற்சியால் கர்மத்தையூட்டி மலபரிபாகம் பண்ணப்படும்.

## தேர் / இரதம்



தேர்களை நகரும் கோயில்கள் என்றும் செ ால்லலாம். ஏனெனில் கோயிலின் அமைப்பைப் போலவே தேர்களும் அமைக்கப்பட்டிருக்கும். தேர்கள் எவ்வாறு வடிவமைக்கப்பட வேண்டு மென மானசாரம் எனும் நூல் குறிப்பிடுகின்றது.

தேக்கு, கோங்கு, மருது, வேங்கை போன்ற மரங்கள் தேர் செய்வதற்குப் பயன்படுகின்றன. சதுரம், அறுகோணம், எண்கோணம், பதின்கோணம், பன்னிரு கோணம், வட்டம், நீள்வட்டம், நீள்சதுரம், முட்டை வடிவம் என ஒன்பது வடிவங்களில் தேர் செய்யப்படுகின்றன.

தேரோட்டத்தின் போது ஒன்று, மூன்று அல்லது ஐந்து தேர்கள் இடம்பெறுவது உண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட தேர்கள் இடம்பெறும் போது கோயிலின் தலைமைக் கடவுளுக்கு பெரிய தேரும் பிற கடவுளருக்கு முக்கியத்துவத்தின் அடிப்படையில் தேர்களும் இருக்கும்.

### தீர்த்தத் திருவிழா



மகோற்சவத்தில் இறுதியாக இடம்பெறுவது தீர்த்தோற்சவமாகும். தீர்த்தத் திருவிழாவிலே அஸ்திரதேவர் தீர்த்தத்திலே மூழ்குதல் திரோதான சக்தி பராசக்தியோடு ஒன்றாதலைக் குறிக்கும். அடியார்கள் தீர்த்தமாடுதல் திரோதான சக்தியாலே தாங்கப்பட்ட ஆன்மாக்களும் பராசக்தியிலே படிந்து சிவத்தைத் தரிசித்தலைக் காட்டும்.

### கொடியிறக்கல்

மகோற்சவத்தில் கொடியிறக்கல் ஐந்தொழில் முடிபையும் ஆன்மாக்கள் முத்தியடைதலையும் குறிக்கும்.

### மகோற்சவத்தில் சாம்பவத் தீட்சை

திருவிழாக்களை சாம்பவ தீட்சை எனவும் அழைப்பதுண்டு. காரணம், தீட்சை பெறாதவர்களுக்கும், தீயோர்களுக்கும், மிருகங்கள், பறவைகள் முதலியவற்றுக்கும் இந்தத் திருவிழாக்களைக் காணுதலே தீட்சையாகும்.

## பயிற்சிகள்

*பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

1. *மகோற்சவம் என்றால் என்ன?*
2. *மாகோற்சவம் என்ற சொல்லின் தத்துவ விளக்கம் யாது?*
3. *கொடிமரத் தத்துவம் யாது?*
5. *தீர்த்தத் திருவிழா குறிப்பிடும் தத்துவம் என்ன?*

## செயற்பாடு

★ *உமது ஊர்க்கோயிலில் இடம்பெற்ற மகோற்சவத்தினை ஆரம்பம் முதல் நிறைவு வரையான நிகழவுகளைத் திரட்டி ஒப்படையாக்கி ஆசிரியரிடம் சமர்ப்பிக்குக. பின்னர் அது பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுங்கள்.*

## பாடச்சுருக்கம்

★ கோயில் மூல மூர்த்திகளை பல வித வாகனங்களின் மேல் எழுந்தருளச் செய்து நடத்துவிக்கும் விழா மகோற்சவம் எனப்படும்.

★ உற்சவம் என்பது ஐந்தொழிலைக் குறிப்பதோடு, மேலான ஞானத்தையும் போக மோட்சத்தையும் கொடுப்பது என்ற அர்த்தத்திலும் வழங்கப்படுகின்றது.

★ மகோற்சவத்தோடு தொடர்புடைய பல அம்சங்கள் இடம்பெறுகின்றன.அவை, கொடியேற்றம், தேர், சுவாமி வெளிவீதி வலம்வருதல், தீர்த்தோற்சவம், சாம்பவத் தீட்சை என்பனவாகும்.